பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் 51 ஆவது நினைவு நாளை யொட்டி கோவை மாநகர் மாவட்ட திமுக சார்பில் கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

தந்தை பெரியாரின் 51வது நினைவு நாளை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்டம், குனியமுத்தூர் பகுதி, பாலக்காடு மெயின் ரோடு சுண்ணாம்புகால்வாய் பகுதியில் அமைந்துள்ள தந்தை பெரியாரின் திருவுருவ சிலைக்கு வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொ.அ.ரவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் கோவை வடகோவை கிராஸ்கட் சாலையில் உள்ள கோவை மாவட்டக் கழக அலுவலகத்தில் உள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு, மலர்தூவி மரியாதை செலுத்தினார் உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர்.பொதுக்குழு உறுப்பினர் வெற்றிசெல்வன் மாவட்ட துணைச்செயலாளர் ஜெயந்தி பொருளாளர் ரஹ்மான் பகுதிக்கழக செயலாளர்கள் கார்த்திக்செல்வராஜ் குணியமுத்துர் லோகு,ஜெய்லாப்தீன் , கேபிள்மணி,அணிகளின் அமைப்பாளர்கள் தென்னை சிவா ஏ.எம் உசேன் , தளபதி தியாகு, துரை கதிரவன் எஸ்.எம்.எஸ். சுதாகர். பேரூர் பேரூரட்சி தலைவர் அண்ணாதுரை, வேடபட்டி தண்டபாணி தாழியூர் தண்டபானி,கரும்புக்கடை சாதிக், இப்றாகீம் , ஆர்.எஸ்.புரம்பூபாலன், எல்.பி.எப். விவேகானந்தன். ஏ.அதிரடி அல்தாப், சாரமேடு இஸ்மாயில் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

தந்தை பெரியார் நினைவு தினம்!

கோவை மாநகர் மாவட்டத்தில் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிப்பு,

நா.கார்த்திக் – முன்னணியினர் பங்கேற்பு!

கோவை, டிச. 26- கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் கோவை வடகோவை கிராஸ்கட் சாலையில் உள்ள கோவை மாவட்டக் கழக அலுவலகத்தில் உள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு, மலர்தூவி மரியாதை செலுத்தினார் இந்நிகழ்வில், தந்தை பெரியார் திராவிடர் கழக பொதுச் செயலாளர் கு.இராம கிருஷ்ணன், மாநகராட்சி மேயர் இரங்கநாயகி இராமச்சந்திரன், மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், தீர்மானக் குழு இணைச் செயலாளர் பி. நாச்சிமுத்து,

தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ தமிழ்மறை, தலைமைக் கழகப் பேச்சாளர் கோவை சம்பத்,பொதுக்குழு உறுப்பினர்கள் மு.மா.ச. முருகன், வழக்கறிஞர் ம.மகுடபதி,இரா.மணிகண்டன்,ச. கார்த்திகேயன், சங்கனூர் ஆனந்தகுமார், சரஸ்வதி புஷ்பராஜ்,பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆர்.எம். சேதுராமன், வ.ம.சண்முக சுந்தரம், பரணி கே.பாக்கியராஜ்,மா.நாகராஜ், மார்க்கெட் எம்.மனோகரன், வி.ஐ.பதுரு தீன்,

மாநகராட்சி மண்டலத் தலைவர்கள் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், தெய்வ யானை தமிழ் மறை,சார்பு அணிகளின் தலைவர்கள் அமைப்பாளர்கள் கண்ணதாசன் ex.mc., இரா.தனபால், டெம்போ சிவா, இலா. தேவசீலன்,அக்ரி பாலு, ஆர்.கே. சுரே ஷ்குமார், வி.மணி,தி.கண்ணன்,திருநாராயணன், டாக்டர் சஜீவ் ரங்கசாமி,lpf பெரியசாமி, ஆட்டோ வணங்காமுடி,lpf ஆனந்த், சீனிவாசன்,

அதிரடி அல்தாப், கேசவன் ex.mc.,வட்டக் கழகச் செயலாளர்கள் கே.ராமநாதன்,மு.சசிகுமார், விஜயகுமார், வழக்கறிஞர் சிவகுமார், சீனிவாசன்,நா. தங்கவேல், டவுன் பா ஆனந்த்,ப.மோகன்ராஜ், ஆர்.எஸ்.புரம் பூபாலன் LPF விவேகானந்தன் மாமன்ற உறுப்பினர்கள் அம்பிகா தனபால் mc. ஜெயப்பிரதா தேவி MC., பகுதிக் கழக வட்டக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள், கழக செயல்வீரர்கள் கழகத் தொண்டர்கள்,BLA2 பாகமுகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

தந்தை பெரியார் நினைவு தினம்!

கரூர் மாவட்டத்தில் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை,டிச.26- கழகத் தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர் மு.கஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்டக் கழகச் செயலாளர், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி ஏற்பாட்டின்பேரில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு கரூர் மாவட்ட திமுக சார்பில் கரூர் திருமாநிலையூரில் அமைந்துள்ள தந்தை பெரியாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயக்குமார், குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.இளங்கோ, கிருஷ்ணராய புரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாம சுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன், மாவட்டக் கழக துணை செயலாளர்கள், எம்.எஸ். கே.கருணாநிதி, மகேஸ்வரி சுப்பிர மணி, பூவை ரமேஷ்பாபு,

மாவட்ட கழக பொருளாளர் பி.வி.பரத், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜ கோபால், அ.சிவராமன், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி கழக பொதுக்குழு உறுப்பினர்கள் வி.கருப்பண்ணன், என்.எஸ்.ஆறுமுகம், கே. வேலுச்சாமி, விகே.டி. ராஜ்கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ. ஜாபருல்லா, ஏ. நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ்.காளியப்பன், என். ராமலிங்கம், பி.சிவகாம சுந்தரி, கலாவதி சக்திவேல், பி.ஏ.குமார், கரூர் மாநகர கழக செயலாளர் எஸ்.பி.கனகராஜ், கரூர் வடக்கு பகுதி கழக செயலாளர் கரூர் கணேசன், கரூர் தெற்கு பகுதி கழக செயலாளர் க.சுப்பிர மணியன், கரூர் மத்திய கிழக்கு பகுதி கழக செயலாளர் ஆர்.எஸ்.ராஜா, கரூர் மத்திய மேற்கு பகுதி கழக பொறுப்பாளர் ஆர். ஜோதிபாசு, கரூர் மத்திய பகுதி கழக பொறுப்பாளர் வி.ஜி.எஸ்.குமார், அரவக்குறிச்சி மேற்கு ஒன்றிய செயலாளர் எம்.எஸ்.மணியன், அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் என்.மணிகண்டன், க.பரமத்தி தெற்கு ஒன்றிய செயலாளர் கே. கருணாநிதி,

க.பரமத்தி வடக்கு ஒன்றிய செயலாளர் த.கார்த்திக், கரூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சி.வளர்மதி, கரூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் வி.கே. வேலுச்சாமி, கரூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.முத்துக்குமார், தாந்தோணி கிழக்கு ஒன்றிய செயலாளர் எம்.ரகுநாதன், தாந்தோணி மேற்கு ஒன்றிய செயலாளர் கே.பாஸ்கரன், கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.ரவிராஜா, கடவூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.ராமலிங்கம், கடவூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.வீராசாமி (எ) சுதாகர், கடவூர் மேற்கு ஒன்றிய செயலாளர் என்.செல்வராஜ், கிருஷ்ணராய புரம் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் சி.கதிரவன், கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எல். கரிகாலன், குளித்தலை கிழக்கு ஒன்றிய செயலாளர் அ.சந்திரன், குளித்தலை மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.தியாகராஜன், தோகைமலை மேற்கு ஒன்றிய செயலாளர் இ.ராமர், தோகைமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜி.அண்ணாதுரை, பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, புகழூர் நகர செயலாளர் ஏ.குணசேகரன், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூர் செயலாளர் க.முரளி ராஜா, புலியூர் பேரூர் செயலாளர் கா. அம்மையப்பன், உப்பிடமங்கலம் பேரூர் செயலாளர் சி.தங்கராஜ், கிருஷ்ணராயபுரம் பேரூர் செயலாளர் எம். சசிக்குமார், பழைய ஜெயங்கொண்டம் பேரூர் செயலாளர் ஆர்.மோகன் ராஜ், மருதூர் பேரூர் செயலாளர் இ.ரவீந்திரன், நங்கவரம் பேரூர் செயலாளர் எம்.முத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதி கள் கழகமூத்த முன்னோடிகள் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டு தந்தை பெரியார் அவர்களின் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

தலைவர் கலைஞர் திறந்துவைத்த அதே தினத்தில்

திருவாரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம்!

முதல்வர் காணொலி மூலம் திறந்துவைத்தார்!

திருவாரூர்,டிச. 26 - மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக பொறுப்பேற்று திறந்த திருவாரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடம், புதிதாக கட்டப்பட்டு, அதே திருநாளில் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களால் காணொளிக் காட்சி வழியாக திறந்து வைக்கப்பட்டது மக்களுக்கு மகிழ்வைத் தந்துள்ளது.

தமிழ்நாடு முதல்வர் , திராவிட நாயகர் சாதனை திட்டங்களின் தொடர்ச்சியாக, திருவாரூர் மாவட்டத்தில் மக்கள் பயனுற புதிதாக கட்டிடங்கள் கட்டப்பட்ட திருவாரூர், கோட்டூர், முத்துப்பேட்டை, நீடாமங்கலம் ஒன்றியங்களின் அரசு அலுவலகங்கள் காணொளி வாயிலாக தமிழ் நாடு முதல்வர் கரங்களால் திறப்புவிழா கண்டது.

இந்த திறப்புவிழாவின் சிறப்பாக திருவாரூர் ஊராட்சிய ஒன்றிய அலுவலக கட்டிடம் 1967ஆம் ஆண்டு டிசம்பர் 23ம் நாள் அப்போதைய பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட திருவாரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் , அதே தினத்தில் தற்போது திராவிட நாயகர் தமிழ்நாடு முதல்வர் அவர்களால் புதிய கட்டிடமாக திறந்து வைக்கப்பட்டிருப்பது மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது குறிப்பிடத்த க்கது. தற்போது புலிவலம் ஏ.தேவா ஒன்றியக் குழு தலைவராக உள்ளார்.

முதல்வர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த திறப்பு விழாவை தொடர்ந்து, ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற கண்கவர் கிராமிய கலை நிகழ்சிகள் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அலுவலகங்களில் இனிப்புகள் வழங்கினார். நிகழ்வில் நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், ஒன்றிய குழு தலைவர் புலிவலம் ஏ.தேவா, மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, வாரை.எஸ்.பிரகாஷ், மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ ஆகியோர் துவக்கி வைத்தனர்.

மேலும் இந்த திறப்பு விழா நிகழ்வுகளில் கோட்டூரில் தமிழ் நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ. கே.எஸ்.விஜயன், சட்டமன்ற உறுப்பினர் கே.மாரிமுத்து, நீடாமங்கலத்தில் ஒன்றியக்குழு தலைவர் சோம. செந்தமிழ்செல்வன், முத்து ப்பேட்டையில் மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், மற்றும்ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், வீ.எஸ்.ஆர். தேவதாஸ், பால.ஞானவேல், இரா.மனோகரன் , நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ், ஆர்.ராஜசேகரன், நகர்மன்ற தலைவர் ஆர்.ராமராஜ், புவனப்ரியா செந்தில்,துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர் மற்றும் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் , கழக நிர்வாகிகள் ,அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு கரூர் மாவட்ட கழகம் சார்பில், கரூர் திருமாநிலையூர் ரவுண்டானாவில் அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் சிலைக்கு கரூர் மாவட்டக் கழகச் செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி ஏற்பாட்டில், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், எம்.எல்.ஏ.க்கள் இரா. மாணிக்கம், ஆர். இளங்கோ, க. சிவகாமசுந்தரி, கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு இணைச்செயலாளர் முனவர் ஜான், கழக கொள்கை விளக்க துணைச்செயலாளர் கரூர் முரளி, மாவட்டக் கழக நிர்வாகிகள் பூவை ரமேஷ்பாபு, எம்.எஸ் கே. கருணாநிதி, பாரத், மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ் உள்பட கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

ஐயா! நின் நினைவிடத்தில் சூளு ரைப்போம்!

ஈரோட்டு நாயகனே! தமிழர் தங்கள்
இனமானச் சூரியனே! எட்டுத் திக்கும்
மார்தட்டிச் சுழன்றுவந்தாய்! மனித னுக்கு
மானமும் அறிவும்தான் அழகே என்றாய்!
கூர்மிக்கச் சிந்தனையால் குரல்கொ டுத்தாய்!
கொட்டாவித் துயில்கலைத்தாய்! எழுச்சி தந்தாய்!
போராடி உரிமைகளைப் பெற்றுத் தந்தாய்!
பொதுப்பணிக்கே கொடைதந்தாய் உனது வாழ்வை!

பாடிவைத்த பழமைகளைச் சாடி வைத்தாய்!
பாமரர்க்கும் பகுத்தறிவை விதைத்தாய்! மூடக்
காடெரித்த யுகக்கனலே! ஐயா. உன்றன்
கைத்தடியின் வளைவிலும்கம் பீரம் உண்டே!
தாடிவைத்த குழந்தைநீ சிரிக்கும் போதில்
தலைமுதல்பா தம்வரைக்கும் மகிழ்ச்சி பொங்கும்!
ஏடெடுத்தே நீ.கணைகள் தொடுக்கும் போதில்
எதிரிகளின் அடித்தளமே நொறுங்கிப் போகும்!

மூன்றுவிழுக் காடுள்ள ஒருகூட் டத்தின்
மூவாயி ரம்வருட ஆதிக் கத்தைச்
சான்றுசொல்லி உலகுக்கே எடுத்து ரைத்தாய்!
சனானத்தின் கொடுமைகளைத் தோலு ரித்தாய்!
ஆன்றோராய் சான்றோராய் கல்வி பெற்றே
அடித்தட்டு மக்களையும் உயரச் செய்தாய்!
தோன்றின்நற் புகழோடு தோன்றி வந்தாய்!
தொண்டுசெய்து பழுத்தபழம் ஆகி நின்றாய்!

அலைவைத்த கடலைப்போல் இயங்கி வந்தாய்!
ஆயிரமா? அதற்கதிகம் பிறைகள் கண்டாய்!
வலைவைத்துப் பார்த்தார்கள். அறுத்தெ றிந்து
வலம்வந்தாய் நாடெங்கும்! கொண்டு வந்து.உன்
தலைவைக்க வேண்டும்என்ற நரிக்கூட் டத்தைத்
தரைமட்டம் செய்தாய்! நம் கலைஞ ருக்குச்
சிலைவைத்துப் பேரன்பைப் பொழிந்தாய்! என்றும்
சிதையாத புகழுக்கே புகழ்கொ டுத்தாய்!

தடியெடுத்து நீஅன்று நடந்த தால்தான்
தமிழர்க்கே அறிஞர்அண்ணா கிடைத்தார்! உன்றன்
குடியரசின் உலைக்கூடத் தகிப்பி லேதான்
“ குவளைப்பூ” போர்க்கருவி ஆன தென்பேன்!
திடலுக்குள் மட்டும்நீ இல்லை! கண்ணீர்த்
திவலைகளைத் துடைத்தெறிந்து சொல்வேன். எங்கள்
உடலுக்குள் உயிரணுக்க ளெல்லாம் உள்ளாய்!
உனைவிட்டுத் தமிழர்க்கு வரலா றேது?

அரியார்க்கும் அரியாராய் பிறந்து வந்தாய்!
அடுத்தடுத்துச் சாதனைகள் புரிந்து வந்தாய்!
வரலாற்றில் “ஈழவர்”தம் உரிமை வென்றாய்!
“வைக்கம்போர் நூற்றாண்டின்” புகழில் நின்றாய்!
பெரியார்க்கும் பெரியார்நீ! அதனா லன்றோ
பெண்ணுரிமை முன்னுரிமை காணச் செய்து
சரியான பாதைக்கே அழைத்து வந்தாய்!
சமத்துவம் சமதர்மம் தழைக்கச் செய்தாய்!

பட்டாலும் தொட்டாலும் தீட்டு! கண்ணில்
பார்த்தாலும் தீட்டென்றார்! அவரை யெல்லாம்
விட்டாயா? அதிரடியால் விரட்டி வைத்தாய்!
விடுதலையால். குடியரசரால் விடியல் தந்தாய்!
அட்டையைப்போல் உறிஞ்சும்அந்தக் கூட்டம். இன்றோ
“அம்பேத்கர்” பெயர்கூட தீட்டென் கின்றார்!
எட்டிஉதைப் போம்அந்த ஆண வத்தை!
ஈரோட்டு நெருப்பில்அதைப் பொசுக்கி ப்போம்!

வியாபாரக் குடும்பத்தில் பிறந்தாய்! உன்னை
விலைபேச எவராலும் முடிய வில்லை!
நியாயத்தின் வடிவம்நீ. அதனால் உன்னை
நீதிமன்றப் பொய்வலைகள் நெருங்க வில்லை!
தியாகம்நீ செய்யவில்லை! தியாகம் உன்னைச்
செய்தது!நீ தரைவாழ்ந்த உலக வாழ்க்கை
மயானத்தின் முடிவல்ல! காலத் தாலும்
மடியாத சரித்திரத்தின் புதுத்தொ டக்கம்!

நீண்டநெடுந் தொலைநோக்கில் உனது கொள்கை
நீட்சிகண்டு “தளபதி”யின் ஆட்சி கண்டு
தாண்டிமிகக் குதிக்கிற து பகைவர் கூட்டம்!
தலைதூக்கி “மனுதர்மம்” போடும் ஆட்டம்!
மீண்டும்உன்றன் “கைத்தடிக்கு” வேலை வந்து
விட்டதையா! சனாதனத்தை விரட்டு தற்கே!
மூண்டெழுவோம் ஐயா.உன் நினைவி டத்தில்!
முறியடிப்போம் சதியை!எனச் சூளு ரைப்போம்!

கவிச்சுடர் கவிதைப்பித்தன்